Q.C. 066

## DEPARTMENTAL EXAMINATIONS (COMPUTER BASED TEST)

| **Name of the Test:** | Registration Department Test - Group-I Paper-I (Without Books) | 109 |
|---|---|---|

Maximum Time: One and Half Hour                    Maximum Marks: 60

## ***IMPORTANT INSTRUCTIONS***

## OBJECTIVE TYPE

கொள்குறி வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**

வினாக்களுக்கு விடையளிக்கத் தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளைக் கவனமாகப் படிக்கவும்.

1. This computer based Test contains 60 number of questions in objective Type.
   இந்தக் கணினி வழித் தேர்வானது, 60 கொள்குறி வகையிலான வினாக்களைக் கொண்டது.

2. Answer all questions. Each question carries one mark
   அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் ஒவ்வொரு வினாவும் ஒரு மதிப்பெண் உடையது.

3 In case of doubt, English version is the Final.
   வினாக்களில் சந்தேகம் இருப்பின் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

4. Words of masculine gender in these questions shall, where the context so require, be taken to include feminine gender.
   இந்த வினாக்களில் இடம் பெற்றுள்ள ஆண் பாலினத்தவரின் வார்த்தைகளில் தேவைப்படின், சூழலுக்கேற்ப பெண் பாலினத்தவரின் வார்த்தைகளும் அடங்கும்.

5. Before answering the questions in CBT, candidates should read the following instructions displayed in the monitor:
   விண்ணப்பதாரர்கள் கணினி வழித் தேர்விற்கு விடையளிக்கத் தொடங்கும் முன் கணினியின் திரையில் தோன்றும் அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்.

**a)** One question will be displayed on the screen at a time.
ஒரே நேரத்தில் ஒரு வினா மட்டுமே கணினித் திரையில் தோன்றும்.

**b)** Time available for you to complete the examination will be displayed through a countdown timer in the top right-hand corner of the screen. It will display the remaining time as **Time Left**. At the beginning of exam, timer will show

1. Which of the following is movable property?
பின்வருவனவற்றுள் எது அசையும் சொத்து?

(A) Right to ways
பாதைகளுக்கான உரிமைகள்

(B) Fisheries
மீன்பிடி பண்ணைகள்

(C) Lights
வெளிச்சம்

(D) Standing Timber
நிற்கும் மரம்

2. In which section of Registration Act, Sub Registrar are appointed by the Government?
பதிவுச் சட்டத்தின் எந்த பிரிவின்படி அரசாங்கத்தால் சார்பதிவாளர்கள் நியமிக்கப்படுகிறார்கள்?

(A) Section 4
பிரிவு 4

(B) Section 5
பிரிவு 5

(C) Section 6
பிரிவு 6

(D) Section 7
பிரிவு 7

3. Which of the following document is not Compulsory Registrable document?
பின்வருவனவற்றுள் எது கட்டாயம் பதிவு செய்ய வேண்டிய ஆவணம் அல்ல?

(A) Sale
விற்பனை

(B) Sale Certificate
விற்பனை சான்று

(C) Sale agreement
விற்பனை உடன்படிக்கை

(D) Construction Agreement
கட்டுமான உடன்படிக்கை

4. Who has the right to attest the interlineations, corrections and erasureres in the document?
ஆவணங்களில் வரியிடை சேர்ப்பு, திருத்தங்கள், அடித்தல்கள் போன்றவை யாரால் அத்தாட்சி செய்ய வேண்டும்?

(A) Stamp Vendor
முத்திரைத்தாள் விற்பனையாளர்

(B) Registering Officer
பதிவு அலுவலர்

(C) Executant
ஆவணம் எழுதிக் கொடுப்பவர்கள்

(D) Document Writer
ஆவண எழுத்தர்

5. Under which section of registration act, cancellation deed of Sale deed should not be registered without the consent of claimant?
பதிவுச் சட்டத்தின் எந்த பிரிவின்படி கிரைய ரத்து ஆவணங்களை கிரையம் எழுதி வாங்கியவர் சம்மதம் இல்லாமல் பதிவு செய்யக்கூடாது என குறிப்பிடப்பட்டுள்ளது?

(A) Section 22 A(2)
பிரிவு 22 A(2)

(B) Section 22 A(3)
பிரிவு 22 A(3)

(C) Section 22 A(1)
பிரிவு 22 A(1)

(D) Section 23 A
பிரிவு 23 A

6. Which of the following is optionally registrable document?
பின்வருவனவற்றுள் எது விரும்பினால் பதிவு செய்யக்கூடியது?

(A) Partition deed
பாக ஆவணம்

(B) Lease deed for 2 year
குத்தகை 2 வருடம்

(C) Gift deed of Rs. 20,000/- value
ரூ. 20,000/- மதிப்புள்ள தானம்

(D) Adoption deed
தத்து ஆவணம்

7. What is the percentage of fine in Registration fees under section 25 of the Registration Act for document presented after Execution of 140 Days?
பதிவுச்சட்டம் பிரிவு 25-ன் படி ஆவணம் எழுதிகொடுத்த நாளிலிருந்து 140 நாட்கள் கழித்து பதிவுக்கு தாக்கல் செய்தால் பதிவு கட்டணத்தில் எத்தனை சதவீதம் அபராதம் விதிக்க வேண்டும்?

(A) 25%

(B) 50%

(C) 75%

(D) 100%

8. Which of the following statement is correct, if document executed out of India presented for Registration within
இந்தியாவிற்கு வெளியே எழுதிக் கொடுக்கப்பட்ட ஆவணம் பதிவுக்கு தாக்கல் செய்யப்பட்டால் கீழ்கண்டவற்றுள் எந்த கூற்று சரியானது?

(A) 4 months from the Date of Execution
ஆவணம் எழுதிக்கொடுத்த நாளிலிருந்து 4 மாதங்களுக்குள்

(B) 4 months from the Date of send to India
இந்தியாவிற்கு அனுப்பப்பட்ட நாளிலிருந்து 4 மாதங்களுக்குள்

(C) 4 months from the Date of arrived in India
இந்தியாவில் பெறப்பட்ட நாளிலிருந்து 4 மாதங்களுக்குள்

(D) 4 months from the Date of Stamp Paper Purchased
முத்திரைத்தாள் வாங்கிய நாளிலிருந்து 4 மாதங்களுக்குள்

9. Any document registered outside the state of Tamilnadu in contravention of provisions of Sec 28(a) shall be deemed as Null and Void. It is implemented from which date?
பதிவுச் சட்டம் பிரிவு 28(a)க்கு முரணாக, தமிழ்நாட்டில் உள்ள நிலங்களை வேறு மாநிலங்களில் பதிவு செய்தால் செல்லாது என்ற சட்டத்திருத்தம் எந்த தேதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டது?

(A) 29.03.1997
(B) 29.03.1998
(C) 29.03.1999
(D) 29.03.2000

10. In which Register Deposit of Will is entered?
விருப்பமுறி ஆவணங்களை வைப்பில் இடுவது தொடர்பான விவரங்களை பதிவு செய்யும் புத்தகம்

(A) Book 1
1 புத்தகம்
(B) Book 2
2 புத்தகம்
(C) Book 5
5 புத்தகம்
(D) Book 4
4 புத்தகம்

11. Date of Introduction of Star 2.0 Software in Registration Department
பதிவுத்துறையில் Star 2.0 மென்பொருள் எந்த தேதியில் அறிமுகப்படுத்தப்பட்டது?

(A) 13.02.2018
(B) 13.03.2019
(C) 13.02.2017
(D) 13.03.2020

12. Validity Period of Document Writers Licence
ஆவண எழுத்தர் உரிமம் செல்லுபடியாகும் காலம்

(A) 3 years
3 வருடங்கள்
(B) 5 years
5 வருடங்கள்
(C) 2 years
2 வருடங்கள்
(D) 4 years
4 வருடங்கள்

13. Which of the following is the commonly used language in all Districts of Tamilnadu under Rule 14 of the Registration Act?
பதிவுச் சட்டம் விதி 14-ன் படி தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் பொதுவாக பயன்படுத்தப்படும் மொழி எது?

1. Tamil

   தமிழ்

2. Malayalam

   மலையாளம்

3. Telugu

   தெலுங்கு

4. Kannada

   கன்னடம்

5. English

   ஆங்கிலம்

(A) 1, 2, 3, 4, 5 Correct
1, 2, 3, 4, 5 சரி

(B) 1, 2, 3, 5 Correct
1, 2, 3, 5 சரி

(C) 1 only Correct
1 மட்டும் சரி

(D) 1, 5 Correct
1, 5 சரி

14. What is the Maximum penalty under Sec. 82 of Registration Act for False personation, delivering False copies of Translation?
பதிவுச் சட்டம் பிரிவு 82ன்படி ஆள்மாறாட்டம், பொய்யான படிகள் அல்லது பொய்யான மொழிபெயர்ப்பை தாக்கல் செய்தால் அதிகபட்ச தண்டனை

(A) 7 years imprisonment Or Fine or Both
7 வருட சிறைதண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து

(B) 5 years imprisonment Or Fine or Both
5 வருட சிறைதண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து

(C) 3 years imprisonment Or Fine or Both
3 வருட சிறைதண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து

(D) 4 years imprisonment Or Fine or Both
4 வருட சிறைதண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து

15. Document Writers Licence rule 1982 is not applicable to
ஆவண எழுத்தர் உரிமம் விதிகள் 1982 யாருக்கு பொருந்தாது?

1. Retired Sub Registrars
ஓய்வுபெற்ற சார்பதிவாளர்

2. Charted Accountant
பட்டயக் கணக்காயர்

3. Advocate
வழக்கறிஞர்

(A) 1, 2, 3 Correct
1, 2, 3 சரி

(B) 1 Only Correct
1 மட்டும் சரி

(C) 3 Only Correct
3 மட்டும் சரி

(D) 2, 3 Correct
2, 3 சரி

16. Authority to Adoption Deed Registered in which Book?
தத்து எடுக்க அதிகாரம் வழங்கும் ஆவணம் எந்த புத்தகத்தில் பதிவு செய்ய வேண்டும்?

(A) Book - 1
1 - புத்தகம்

(B) Book - 3
3 - புத்தகம்

(C) Book - 5
5 - புத்தகம்

(D) Book - 4
4 - புத்தகம்

17. Under which authority of Registration Act, Sub-Registrars issue check slip?
பதிவுச் சட்டத்தின் எந்த விதியின்படி பதிவு சரிபார்ப்பு குறிப்பு சார்பதிவாளரால் வழங்கப்படுகிறது?

(A) Rule 162
விதி 162

(B) Rule 27(ii)
விதி 27(ii)

(C) Rule 72
விதி 72

(D) Rule 161
விதி 161

18. If left thumb is not available to executants, the impression of the ________________ finger shall be obtained.
எழுதிக் கொடுப்பவரின் இடது கை பெருவிரல் இல்லையெனில் ___________ விரலில் ரேகை பெறப்படவேண்டும்.

(A) Right hand Thumb finger
வலது கை பெருவிரல்

(B) Left hand anyone finger
இடது கையின் ஏதாவது ஒரு விரல்

(C) Right hand anyone finger
வலது கையின் ஏதாவது ஒரு விரல்

(D) No need to get impression
ரேகை பெறப்பட வேண்டியதில்லை

19. How fees to be Collected for Encumbrance Application?
வில்லங்க மனுவிற்கு எவ்வாறு பதிவுக்கட்டணம் வசூலிக்கப்படவேண்டும்?

(A) Two fees for house owned by two persons in single Survey Number
ஒரு சர்வே எண்ணில் உள்ள இரண்டு வீடுகளுக்கு இரண்டு கட்டணம்

(B) Each Survey Number is One Fees
ஒரு புல எண்ணுக்கு ஒரு கட்டணம்

(C) One Fees even though More Number of Survey number in One Plot
ஒரு பிளாட்டில் எத்தனை புல எண்கள் இருந்தாலும் ஒரு கட்டணம்

(D) One Fees for all properties in one Person name
ஒருநபர் பெயரில் உள்ள எல்லா சொத்துக்கும் ஒரு கட்டணம்

20. Under which Section Every Court passing an order for effecting or raising and attachment of immovable property shall filed in Book No. 1?
எந்த பிரிவின்படி அசையாச்சொத்து தொடர்பான நீதிமன்ற பற்றுகை மற்றும் விடுவித்தல் ஆணைகள் 1 புத்தக கோப்பில் கோர்வை செய்யப்படுகிறது?

(A) Section 89 (2)
பிரிவு 89 (2)

(B) Section 90
பிரிவு 90

(C) Section 88 (1)
பிரிவு 88 (1)

(D) Section 80 (A)
பிரிவு 80 (A)

21. Life Certificate shall be obtained when document presented by power agent, after ____________ date.
____________ தேதிக்கு பின்னர் பதிவாகும் பொது அதிகார ஆவணங்கள் பதிவுசெய்யப்பட்ட பின்பு, அந்த பொது அதிகார ஆவணங்களின் அடிப்படையில் முகவர் எழுதிக்கொடுக்கும் அனைத்து ஆவணங்களுடன் முதல்வர் உயிருடன் உள்ளார் என்ற சான்று பெற்று தாக்கல் செய்யப்படவேண்டும்?

(A) 01.02.2012
(B) 01.02.2013
(C) 01.02.2014
(D) 01.02.2011

22. Cancellation of Will document shall be registered in ________________
உயில் ரத்து ஆவணம் ___________ புத்தகத்தில் பதிவு செய்யப்படவேண்டும்?

(A) Book 4
4 புத்தகம்

(B) Book 3
3 புத்தகம்

(C) Book 1
1 புத்தகம்

(D) Book 2
2 புத்தகம்

23. Sub Registrar refused registration if the document written in Urdu language because the registering officer does not understand
சார்பதிவாளர் ஆவணம் உருது மொழியில் எழுதப்பட்டுள்ளதால் பதிவு செய்ய மறுக்கிறார், ஏனெனில் சார்பதிவாளருக்கு ஆவணத்தில் உள்ள மொழி புரிந்துகொள்ள இயலவில்லை. என்பதால்

(A) Action is Correct, reason is wrong
செயல் சரி, காரணம் தவறு

(B) Action is Incorrect, reason is Right
செயல் தவறு, காரணம் சரி

(C) Action is Correct, reason is Right
செயல் சரி, காரணம் சரி

(D) Action is Incorrect, reason is incorrect
செயல் தவறு, காரணம் தவறு

24. What is the Maximum Time limit to present a Will document for registration from the date of the Execution?
உயில் ஆவணம் எழுதி கொடுக்கப்பட்ட நாளிலிருந்து அதிகபட்சமாக எத்தனை நாட்களுக்குள் தாக்கல் செய்யவேண்டும்?

(A) 4 Months
4 மாதங்கள்

(B) 8 Months
8 மாதங்கள்

(C) 12 Months
12 மாதங்கள்

(D) No Time Limit
காலவரையில்லை

25. Which Date basis Registration fees to be collected?
பதிவுக்கட்டணம் எந்த நாளின் அடிப்படையில் வசூலிக்கப்படவேண்டும்?

(A) Execution Date
ஆவணம் எழுதிக்கொடுக்கப்பட்ட நாள்

(B) Stamp Papers Purchased Date
முத்திரைத்தாள் வாங்கிய நாள்

(C) Presentation Date
தாக்கல் செய்த நாள்

(D) Witness signed Date
சாட்சி கையொப்பம் செய்த நாள்

26. What is the effect of Compulsory registrable document which is not registered?
கட்டாயம் பதிவு செய்ய வேண்டிய ஆவணம், பதிவு செய்யப்படவில்லையென்றால் ஏற்படும் விளைவு என்ன?

1. Does not affect on immovable Property

அசையாச்சொத்தின் மீது பாதிப்பு ஏற்படுத்தாது

2. Not accepted as a evidence

ஆவணத்தை சாட்சியாக ஏற்க இயலாது

(A) 1 Only Correct
1 மட்டும் சரி

(B) 2 only Correct
2 மட்டும் சரி

(C) 1 and 2 Correct
1 மற்றும் 2 சரி

(D) Both are wrong
இரண்டும் தவறு

27. Sec.52 of the Registration Act refers to
பதிவுச்சட்டம் பிரிவு 52 எதைப்பற்றி கூறுகிறது?

(A) Refusal
பதிவு மறுப்பு

(B) Deposit of Wills
விருப்புறுதி ஆவணங்கள் வைப்பீடு செய்தல்

(C) Delay, condonation
தாமதம், மன்னித்தல்

(D) Duties of Registering officers when document presented
ஆவணம் தாக்கல் செய்யும்போது பதிவு அலுவலரின் கடமைகள்

28. Power to reduce or remit fees lies with?
யாரிடம் கட்டணத்தை குறைப்பு அல்லது தள்ளுபடி செய்வதற்கான அதிகாரம் உள்ளது?

(A) State Government
மாநில அரசு

(B) Governor
ஆளுநர்

(C) District Registrar
மாவட்டப்பதிவாளர்

(D) Inspector General of Registration
பதிவுத்துறைத்தலைவர்

29. Under which section of registration Act, a person desiring to inspect entries in Book-1 and 2 and indexes relating to Book-1 can make search themselves on payment of prescribed fees?
புத்தகம் 1, 2 தொடர்பான பதிவுகளை தனிநபர் விரும்பி பார்வையிடவும், மற்றும் அட்டவணை 1 தொடர்பாக தேடுதல் மேற்கொள்ளவும் உரிய கட்டணம் செலுத்தினால் அனுமதிக்கலாம் என்பது பதிவுச்சட்டத்தின் எந்த பிரிவு

(A) Section 57
பிரிவு 57

(B) Section 49
பிரிவு 49

(C) Section 60
பிரிவு 60

(D) Section 80
பிரிவு 80

30. Which of the following shall be preserved permanently?
பின்வருவனவற்றுள் எது நிரந்தரமாக பாதுகாக்கப்படுவது ?

(A) Birth and Death application file
பிறப்பு இறப்பு விண்ணப்ப கோப்பு

(B) Encumbrance application file
வில்லங்கம் விண்ணப்ப கோப்பு

(C) File of translation
மொழிபெயர்ப்பு கோப்பு

(D) Certificate copy of application file
நகல்மனு விண்ணப்ப கோப்பு

31. Memorandum relating to Book 3 and Book 4 are filed in
3 புத்தகம் மற்றும் 4 புத்தகம் தொடர்பான குறிப்பாவணம் கோர்வை செய்யப்படுவது

(A) Memo file of Book-1
1 புத்தகம் குறிப்பாவணம் தொகுதி

(B) File of appeal, order and Judgement
மேல்முறையீடு ஆணை மற்றும் நீதிமன்ற தீர்ப்பாணை கோப்பு

(C) Correspondence file in the office
அலுவலக கடிதபோக்குவரத்து கோப்பு

(D) Book 3 and 4
3, 4 புத்தகம்

32. Register of Non-testamentary documents relating to immovable property is otherwise known as
அசையாச்சொத்து தொடர்பான விருப்புறுதி ஆவணம் அல்லாத ஆவணங்களின் பதிவேடு என்பது

(A) Book-3
3 புத்தகம்

(B) Book-4
4 புத்தகம்

(C) Book-2
2 புத்தகம்

(D) Book-1
1 புத்தகம்

33. Index shall be prepared in ______________ Language.
அட்டவணை __________ மொழியில் தயாரிக்கப்படவேண்டும்.

1. Tamil
தமிழ்

2. English
ஆங்கிலம்

3. Document Language
ஆவண மொழி

(A) 1 only
1 மட்டும் சரி

(B) 1, 2 Correct
1, 2 சரி

(C) 3 only
3 மட்டும்

(D) 1, 2, 3 correct
1, 2, 3 சரி

34. The search under section 57 of the Registration Act for entries in Book No.3 and 4 shall be made by
பதிவுச்சட்டம் பிரிவு 57-ன் படி 3 புத்தகம் மற்றும் 4 புத்தகத்தின் மீதான தேடுதல் யாரால் மேற்கொள்ளப்படவேண்டும்?

(A) Office Assistant
அலுவலக உதவியாளர்

(B) Assistant
உதவியாளர்

(C) Head Clerk
தலைமை எழுத்தர்

(D) Registering Officer
பதிவு அலுவலர்

35. A Registering officer has to assess the required registration fee of an exchange deed. He has assessed it on the basis of
எதன் அடிப்படையில் பதிவு அலுவலரால் பரிமாற்று ஆவணத்திற்கு பதிவுக்கட்டணம் கணக்கிடப்படுகிறது?

(A) Property of Greater extent
அதிக விஸ்தீரணம் உள்ள சொத்துக்கு

(B) Property of Smaller extent
குறைந்த விஸ்தீரணம் உள்ள சொத்துக்கு

(C) Property of Greater Value
அதிக மதிப்பு உள்ள சொத்துக்கு

(D) Property of Smaller Value
குறைந்த மதிப்பு உள்ள சொத்துக்கு

36. Which of the following Book is the miscellaneous register?
பின்வருவனவற்றுள் எந்த புத்தகம் பல்வகை பதிவேடு?

(A) Book 3
புத்தகம் 3

(B) Book 4
புத்தகம் 4

(C) Book 2
புத்தகம் 2

(D) Book 1
புத்தகம் 1

37. Documents (other than wills) remaining unclaimed shall be destroyed after ________
உயில் தவிர பிற ஆவணங்கள் திரும்ப பெறப்படாமல் இருந்தால் __________ ஆண்டுகளுக்கு பிறகு அழித்தல் நடவடிக்கைக்கு உட்படுத்தவேண்டும்?

(A) 2 Years
2 வருடங்கள்

(B) 5 Years
5 வருடங்கள்

(C) 3 Years
3 வருடங்கள்

(D) 1 Year
1 வருடம்

38. ________________ shall contain the names and additions of all persons executing and all persons claiming under every document which true copy or memorandum is filed in Book No.1.
__________ ல் 1-புத்தகத்தில் பதியப்பட்ட ஆவணத்தில் எழுதிக்கொடுத்தவர்கள் மற்றும் எழுதி வாங்கியவர்களின் பெயர் மற்றும் கூடுதல் விவரங்கள் கொண்டிருக்க வேண்டும்.

(A) Index – 1
அட்டவணை - 1

(B) Index – 3
அட்டவணை - 3

(C) Index – 4
அட்டவணை - 4

(D) Index – 2
அட்டவணை - 2

39. Which Section of the Registration act empowers the District Register to register any document which might be registered by any sub Registrar subordinate to him?
பதிவுச்சட்டத்தின் எந்த பிரிவின்படி மாவட்டப்பதிவாளர் தமக்கு கீழமைந்த சார்பதிவாளர் எவராலும் பதிவு செய்யக்கூடிய ஆவணங்கள் எதனையும் பதிவு செய்ய அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது?

(A) Section 29
பிரிவு 29

(B) Section 23 (A)
பிரிவு 23 (A)

(C) Section 28
பிரிவு 28

(D) Section 30 (1)
பிரிவு 30 (1)

40. Which of the following is not Movable Property?
பின்வருவனவற்றுள் எது அசையும் சொத்து அல்ல?

(A) Standing Timber
நிற்கும் மரம்

(B) Fisheries
மீன்பிடி பண்ணைகள்

(C) Growing crops
வளரும் பயிர்

(D) Grass
புல்

41. Time limit to Re-Registration under Section 23 (A) of the Registration Act
பதிவுச்சட்டம் 23(A)-ன் படி மறுபதிவு செய்வதற்கான காலவரையறை

(A) 4 months from the Date of the Original Registration
அசல் ஆவணம் பதிவிலிருந்து 4 மாதத்திற்குள்

(B) 8 months from the date of the Original Registration
அசல் ஆவணம் பதிவிலிருந்து 8 மாதத்திற்குள்

(C) 4 months from the Date of the Claimant become aware
எழுதிப்பெற்றவருக்கு தெரிய வந்ததிலிருந்து 4 மாதத்திற்குள்

(D) 8 month from the date of the Claimant become aware
எழுதிப்பெற்றவருக்கு தெரிய வந்த்ததிலிருந்து 8 மாதத்திற்குள்

42. Which section allows keeping a books in computer Floppies, Diskettes etc?
எந்த பிரிவு புத்தகங்களை கணினி நெகிழ்வட்டுகள், குறுவட்டுகள் ஆகியவற்றில் வைப்பதற்கு அனுமதிக்கப்படுகிறது?

(A) Section 16
பிரிவு 16

(B) Section 19
பிரிவு 19

(C) Section 21
பிரிவு 21

(D) Section 16 A
பிரிவு 16 A

43. Why Re-registration of certain documents under Sec 23-A of Registration Act?
சில ஆவணங்களை பதிவுச்சட்டம் பிரிவு 23(A)-ன் படி மறு பதிவு செய்வது ஏன்?

(A) Registered in wrong office
தவறான அலுவலகத்தில் பதிவு செய்ததால்

(B) Registered in wrong book
தவறான புத்தகத்தில் பதிவு செய்ததால்

(C) Person presented not duly empowered to present the document
தாக்கல் செய்ய அதிகாரம் இல்லாத நபர்களால் ஆவணம் தாக்கல் செய்ததால்

(D) Stamp paper not purchased in the name of claimant
எழுதி வாங்கியவர் பெயரில் முத்திரைத்தாள் இல்லாததால்

44. Who is the Licensing authority to issue Sub District Licence to Document Writers?
ஆவண எழுத்தர்களுக்கு சார்பதிவகங்களைப் பொறுத்து ஆவணம் எழுதும் உரிமம் வழங்கும் அதிகாரி யார்?

(A) Deputy Inspector General of Registration
பதிவுத்துறைத் துணைத்தலைவர்

(B) Inspector General of Registration
பதிவுத் துறைத்தலைவர்

(C) District Registrar
மாவட்டப் பதிவாளர்

(D) Sub Registrar
சார்பதிவாளர்

45. Calculate the Registration fees for a partnership deed executed among the partners A, B and C. Investment is 7 Lakhs, 8 Lakhs and 10 Lakhs respectively.
A, B மற்றும் C என்ற கூட்டுப்பங்காளர்கள் சேர்ந்து கூட்டுப்பங்கு நிறுவனம் ஆவணம் எழுதிக்கொள்கின்றனர். முதலீடுகள் முறையே ரூ.7 லட்சம், ரூ.8 லட்சம் ரூ.10 லட்சம் எனில் பதிவுக்கட்டணம் கணக்கிடுக.

(A) Rs. 15,000
ரூ. 15,000

(B) Rs. 25,000
ரூ. 25,000

(C) Rs. 50,000
ரூ. 50,000

(D) Rs. 1 Lakh
ரூ. 1 இலட்சம்

46. Two Persons A and B executed exchange document of their property value of A is Rs. 1,67,100/- and property value of B is Rs. 1,68,200/- calculate the Registration fees.
A, B என்ற இரண்டு நபர்கள் தங்கள் சொத்துக்களை பரிமாற்றம் செய்வதாக ஆவணம் எழுதிக்கொண்டுள்ளனர், A-ன் சொத்து மதிப்பு ரூ.1,67,100/- B-ன் சொத்து மதிப்பு ரூ.1,68,200/- பதிவுக்கட்டணம் கணக்கிடுக

(A) Rs. 6,684
ரூ. 6,684

(B) Rs. 6,730
ரூ. 6,730

(C) Rs. 6,685
ரூ. 6,685

(D) Rs. 6,728
ரூ. 6,728

47. No Registration fees shall be payable in respect of instrument of sale the Immovable property. The market value of which does not exceed ____________
__________ மதிப்புக்கு மிகைப்படாத சந்தை மதிப்புள்ள அசையா சொத்துக்களை விற்பனை செய்யப்படும் ஆவணங்களுக்கு பதிவுக்கட்டணம் இல்லை

(A) Rs. 25,000
ரூ. 25,000

(B) Rs. 1 lakh
ரூ.1 இலட்சம்

(C) Rs. 20,000
ரூ. 20,000

(D) Rs. 30,000
ரூ. 30,000

48. Fees for the Opening of Sealed cover containing will
மூடி முத்திரையிடப்பட்ட உயில் உள்ள உறைகளை திறப்பதற்கான கட்டணம்

(A) Rs. 50
ரூ. 50

(B) Rs. 100
ரூ. 100

(C) Rs. 200
ரூ. 200

(D) Rs. 25
ரூ. 25

49. A Partition deed among non family members ABC the value of their share of properties are Rs. 20 Lakhs, Rs.15 Lakhs and 8 Lakhs respectively. Calculate the fees to be collected.
குடும்ப நபர்கள் அல்லாத மூன்று நபர்கள் ABC ஆகியோருக்கிடையே பாகம் ஆவணம் எழுதிக் கொடுக்கப்பட்டு தாக்கல் செய்யப்பட்டது. அவர்களின் பாக மதிப்பு முறையே 20 லட்சம் 15 லட்சம் மற்றும் 8 லட்சம். இதற்கு வசூலிக்கவேண்டிய பதிவுக் கட்டணம் கணக்கிடுக?

(A) Rs. 43,000
ரூ. 43,000

(B) Rs. 12,000
ரூ. 12,000

(C) Rs. 23,000
ரூ. 23,000

(D) Rs. 92,000
ரூ. 92,000

50. Fees for Protest Petition ______________
தாவா மனுவிற்கு கட்டணம் __________

(A) Rs. 20
ரூ. 20

(B) Rs. 100
ரூ. 100

(C) Rs. 200
ரூ. 200

(D) Rs. 400
ரூ. 400

51. Registration fee for will executed by two testator
இரண்டு நபர்கள் சேர்ந்து ஒரு உயில் ஆவணம் எழுதி வைத்தால் வசூலிக்கப்படவேண்டிய பதிவு கட்டணம்

(A) Rs. 500
ரூ. 500

(B) Rs. 200
ரூ. 200

(C) Rs. 1,000
ரூ. 1,000

(D) Rs. 100
ரூ. 100

52. Calculate the Search Fees for Single Survey No. for the period of 31.12.1975 to 01.01.2001 Encumbrance application
ஒரு புல எண்ணிற்கு 31.12.1975 முதல் 01.01.2001 வரை உள்ள காலத்திற்கு வில்லங்க மனுவிற்கான தேடுதல் கட்டணம்

(A) Rs. 250
ரூ. 250

(B) Rs. 270
ரூ. 270

(C) Rs. 290
ரூ. 290

(D) Rs. 300
ரூ. 300

53. What is the fees for Registration of Power of Attorney authorizing the attorney not to sell the property if given to Non-family members?
குடும்ப உறுப்பினர்கள் அல்லாத நபர்களுக்கிடையேயான பொது அதிகார ஆவணம் விற்பனை செய்ய அதிகாரம் வழங்கப்படவில்லையெனில் வசூலிக்கப்படவேண்டிய பதிவுக் கட்டணம்

(A) Rs. 10,000
ரூ. 10,000

(B) Rs. 1,000
ரூ. 1,000

(C) Rs. 50
ரூ. 50

(D) Rs. 100
ரூ. 100

54. One and same individual executed 5 documents for registration at private residence. What is the fees for Private attendance?
ஒரே நபரால் எழுதிக்கொடுக்கப்படும் 5 ஆவணங்களுக்கு சார்பதிவாளரால் தனியார் இருப்பிடம் சென்று பதிவு செய்தால் வசூலிக்கப்படவேண்டிய கட்டணம்

(A) Rs. 1,000
ரூ. 1,000

(B) Rs. 500
ரூ. 500

(C) Rs. 100
ரூ. 100

(D) Rs. 200
ரூ. 200

55. Mortgage deed executed in favour of Co-operative Bank for Loan Amount of Rs. 5 Lakhs. Calculate the fees to be levieable.
ஈடு ஆவணம் கூட்டுறவு வங்கிக்கு எழுதிக் கொடுக்கப்படுகிறது கடன் தொகை ரூ.5,00,000/-க்கு வசூலிக்கப்படவேண்டிய பதிவுக்கட்டணம் கணக்கிடுக.

(A) No fees
பதிவு கட்டணம் இல்லை

(B) Rs. 5,000
ரூ. 5,000

(C) Rs. 2,500
ரூ. 2,500

(D) Rs. 10,000
ரூ. 10,000

56. Calculate the registration fee for a lease deed for 10 years if monthly rent fixed for First Five years is Rs. 3,000/- and next 5 years is Rs. 3,500/-. Advance is Rupees 1 Lakh.
குத்தகை ஆவணத்திற்கு பதிவுக்கட்டணம் கணக்கிடுக. குத்தகை காலம் 10 வருடம், முதல் 5 வருடத்திற்கு வாடகை ரூ.3,000/-, மீதமுள்ள 5 வருடத்திற்கு வாடகை ரூ.3,500/-மற்றும் முன்பணம் ரூபாய் ஒரு இலட்சம்

(A) Rs. 3,900
ரூ. 3,900

(B) Rs. 5,150
ரூ. 5,150

(C) Rs. 4,900
ரூ. 4,900

(D) Rs. 5,000
ரூ. 5,000

57. State Government Employee Executed Mortgage deed Rs. 40 Lakhs Loan as House Building Advance from the Government calculate the fees.
மாநில அரசு ஊழியர் அரசிடமிருந்து வீடு கட்டும் முன்பணம் ரூ.40 இலட்சத்திற்கு ஈடுகடன் ஆவணம் எழுதிக்கொடுக்கிறார். அதற்குரிய பதிவுக்கட்டணம் கணக்கிடுக.

(A) Rs. 20,000
ரூ. 20,000

(B) Rs. 10,000
ரூ. 10,000

(C) Rs. 100
ரூ. 100

(D) No Fees
பதிவுக் கட்டணம் இல்லை

58. What is the fees for document in which transaction is susceptible of money valuation?
சொத்து பரிமாற்றத்தில் மதிப்பினை அறிய முடியாத நிலையில் ஆவணத்திற்கு எவ்வளவு பதிவுக்கட்டணம் வசூலிக்கப்படவேண்டும்?

(A) Rs. 10
ரூ. 10

(B) Rs. 100
ரூ. 100

(C) Rs. 1
ரூ. 1

(D) No fees
பதிவுக்கட்டணம் இல்லை

59. Property sold through public auction by Debt Recovery Tribunal. Auction Value is 10 Lakhs and Guidelind Value is 12 Lakhs, Calculate fees for this Sale certificate documents.
கடன் வசூல் தீர்ப்பு ஆணையத்தால் சொத்து ஏலத்தில் விற்பனை செய்யப்படுகிறது. ஏலத்தொகை ரூ.10 இலட்சம், வழிகாட்டி மதிப்பு ரூ. 12 இலட்சம். இந்த விற்பனை சான்று ஆவணத்திற்கு பதிவுக்கட்டணம் கணக்கிடுக.

(A) Rs. 12,000
ரூ. 12,000

(B) Rs. 10,000
ரூ. 10,000

(C) Rs. 48,000
ரூ. 48,000

(D) Rs. 40,000
ரூ. 40,000

60. Power of Attorney authorizing the attorney to sell the immovable property given to persons of family members after getting Rs. 12 lakhs as power consideration. Value of the Property is Rs. 50 lakh. Calculate the fees to be collected.
அசையாச்சொத்தை விற்க குடும்ப உறுப்பினர்க்கு ரூ.12 லட்சம் கைமாறு தொகை பெற்றுக்கொண்டு பொது அதிகாரம் வழங்கப்படுகிறது. சொத்தின் சந்தைமதிப்பு ரூ.50 லட்சம் வசூலிக்கப்படவேண்டிய பதிவுக்கட்டணம் கணக்கிடுக.

(A) Rs. 10,000
ரூ. 10,000

(B) Rs. 12,000
ரூ. 12,000

(C) Rs. 1,000
ரூ. 1,000

(D) Rs. 50
ரூ. 50

066/DD/25

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

# DEPARTMENTAL EXAMINATIONS

## REGISTRATION DEPARTMENT TEST – GROUP – I PAPER – I

(With Books)

Maximum Time : 1 Hour

Maximum Marks : 40

## *IMPORTANT INSTRUCTIONS*

## DESCRIPTIVE TYPE
**விரிவான விடையளிக்கும் வகை வினாத்தாள்**

**Read the following instructions carefully before beginning to answer the questions.**
வினாக்களுக்கு விடையளிக்க தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாக படிக்கவும்.

1. Answers in excess of the prescribed number of questions appearing at the end of the answer book will not be valued.

   விடைகளை குறிப்பிட்டுள்ள எண்ணிக்கைக்கு அதிகமாக எழுதியிருப்பின், விடைத்தாளின் இறுதியில் உள்ள அதிக எண்ணிக்கையிலான விடைகள் மதிப்பீடு செய்யப்படாது.

2. Answer should be in brief and to the point and need not be a verbatim reproduction of printed pages. (Applicable for tests to be answered "with books" only).

   விடைகள் சுருக்கமாகவும், வினாவிற்கு உரிய அளவிலும் இருக்க வேண்டும். புத்தகத்தில் உள்ளவற்றை அப்படியே வார்த்தைக்கு வார்த்தை திரும்ப எழுதக் கூடாது. (இக்குறிப்பு புத்தகங்களுடன் எழுதும் தேர்விற்கு மட்டும் பொருந்தும்)

3. In case of doubt, English version is the final.

   வினாக்களில் சந்தேகமிருப்பின் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

**Write any EIGHT questions.**

**எவையேனும் <u>எட்டு</u> கேள்விகளுக்கு விடையளிக்கவும்.** **(8 × 5 = 40)**

1. Briefly Explain about Time of Presenting Document.

   ஆவணங்களை தாக்கல் செய்வதற்கான காலம் குறித்து சுருக்கமாக விளக்குக.

2. Describe procedure on Deposit of Will.

   விருப்புறுதி ஆவணங்களை வைப்பீடு செய்யப்பட்டதன் பேரில் நடைமுறைகளை விவரி.

**[Turn over**

3. Write about the Books and files shall be preserved permanently.
நிரந்தரமாக பாதுகாக்கப்படவேண்டிய புத்தகங்கள் மற்றும் கோப்புகள் பற்றி எழுதுக.

4. Describe the Commonly used languages to write the document in Tamilnadu.
தமிழ்நாட்டில் ஆவணம் எழுத பொதுவாக பயன்படுத்தப்படும் மொழிகள் பற்றி விளக்குக.

5. As per the registration Act, what are the document optionally registrable?
பதிவுச்சட்டப்படி எந்தெந்த ஆவணங்கள் விருப்பத்தின்படி பதிவு செய்யும் ஆவணங்கள்?

6. What are the reasons for refusal to register the document?
ஆவணங்கள் பதிவு செய்ய மறுக்கப்படுவதற்கான காரணங்கள் என்ன?

7. Describe the duties of registering officer when document presented.
ஆவணங்களை பதிவுக்கு தாக்கல் செய்யும் போது பதிவு செய்யும் அலுவலரின் கடமைகள் பற்றி விவரி.

8. Describe the procedure of suspension and cancellation of the document writers Licence.
ஆவண எழுத்தர் உரிமம் தற்காலிக ரத்து மற்றும் நடைமுறை பற்றி விவரிக்கவும்.

9. What are the effects of Non-registration of documents required to be registered?
பதிவு செய்யப்பட வேண்டிய ஆவணங்களை பதிவு செய்யாமல் விட்டால் ஏற்படும் விளைவுகள் என்ன?

10. Explain the fines for delays in presentation and appearance under section 25 and 34 of Registration Act?
பதிவுச்சட்டப்பிரிவு 25 மற்றும் 34 ன் படி தாக்கல் செய்வதிலும் மற்றும் எழுதிக் கொடுத்தவர் வருகை புரிவதில் நிகழும் காலதாமதத்திற்காக வசூலிக்கப்படும் அபராதம் பற்றி விளக்குக.

---